Puducherry / Regional Bulletin / Tamil / 18.10hrs / 26.5.2024/

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : ரோஷ்னா காசிம்

தேதி : 26.5.2024 - ஞாயிற்றுக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

மக்களவைக்கு நேற்று நடைபெற்ற ஆறாம் கட்ட தேர்தலில் 61.76 சதவிகித வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

7ஆம் கட்டத் தேர்தல் அடுத்த மாதம் 1ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில், முக்கிய அரசியல் கட்சித் தலைவர்களின் தேர்தல் பிரச்சாரம் சூடுபிடித்துள்ளது.

மக்களவைத் தேர்தல் முடிவடைந்து முடிவுகள் அறிவிக்க இன்னும் சில நாட்களே உள்ள நிலையில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை நாடாளுமன்றத்தில் வரவேற்கும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

மத்திய வங்கக் கடலில் நேற்றிரவு உருவான ரீமல் புயல், இன்று நள்ளிரவு வங்கதேசத்தின் கேபுபாரா, மேற்குவங்க மாநிலம் சாகர் தீவு இடையே கரையைக் கடக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## ஆறாம் கட்டத் தேர்தல் *(17)*

நேற்று காலை 7 மணிக்குத் தொடங்கிய ஆறாம் கட்ட வாக்குப் பதிவு மாலை 6 மணிக்கு நிறைவடைந்தது. இந்தத் தேர்தலில், மக்கள் நீண்ட வரிசையில் நின்று வாக்களித்தனர். மாலை 6 மணியளவில் பல வாக்குச் சாவடிகளில் வாக்காளர்கள் வாக்களிப்பதற்காக வரிசையில் காத்திருந்ததால், 6 மணிக்கு மேலும் டோக்கன் வழங்கி வாக்குச் செலுத்த அனுமதிக்கப்பட்டது.

ஜம்மு – காஷ்மீர் மாநிலத்தில் அனந்த்நாக் – ரஜோரி மக்களவைத் தொகுதியில் 54 சதவிகித வாக்குகள் பதிவானது. இது கடந்த 35 ஆண்டுகளில் அந்த மாநிலத்தில் பதிவான மிக அதிகமான வாக்குப் பதிவு ஆகும். ஆறாம் கட்ட வாக்குப்பதிவில், பீகார் மாநிலத்தில் 55 சதவிகிதமும், ஹரியானாவில் 62 சதவிகிதமும், ஜார்கண்ட்டில் 64 சதவிகிதமும், டெல்லியில் 58 சதவிகித வாக்குகளும் பதிவாகின. இந்த கட்டத்தில் 61.76 சதவிகித வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. இந்தத் தேர்தலில் மொத்தம் 889 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். ஆறாம் கட்டத் தேர்தலுடன் இதுவரை 486 மக்களவைத் தொகுதிக்கு வாக்குப் பதிவு நடந்து முடிந்துள்ளது. 7ஆவது மற்றும் இறுதிக்கட்ட வாக்குப் பதிவு 57 தொகுதிகளில் அடுத்த மாதம் முதல் தேதி நடைபெற உள்ளது. வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 4ஆம் தேதி எண்ணப்படும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

*7ஆம் கட்டத் தேர்தல் -1 (18)*

மக்களவை தேர்தலில் 7ஆவது மற்றும் இறுதிக் கட்ட வாக்குப் பதிவு அடுத்த மாதம் 1ஆம் தேதி நடைபெற உள்ளது. இந்த கட்டத்தில் 8 மாநிலங்கள் உட்பட 57 தொகுதிகளில் தேர்தல் நடைபெற உள்ளது. இந்த தேர்தலையொட்டி, முக்கிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள், தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். பிரதமரும், பாஜக மூத்த தலைவருமான திரு. நரேந்திர மோடி, இன்று, உத்தரப்பிரதேச மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டுள்ளார்.

பாஜக மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி இன்று தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பிரத்யேக பேட்டியில், ஜனநாயகத்தை பொறுத்தவரை தேர்தல் என்பது மிகப் பெரிய திருவிழாவாக கருதப்படுவதாகவும், அதில் மக்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். அரசோ, அல்லது, அரசியல் கட்சியோ மக்களுக்கு பணியாற்ற வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ள அவர், பிரச்சாரத்தின் மூலம் மக்களை சந்திக்கும் வாய்ப்பை மக்கள் நமக்கு அளித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மக்களிடையே தேர்தல் என்பது ஒருவிழாவாக காணப்படுகிறது என்றும் தேர்தல் பற்றிய விழிப்புணர்வை ஊடகங்கள் வாயிலாகவும், தலைவர்கள் வாயிலாகவும், நேரடியாக மேற்கொள்கிறோம் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

*7ஆம் கட்டத் தேர்தல் -2 (19)*

ஜனநாயகம் பற்றிய கருத்துக்கள் எல்லா தலைமுறைகளையும் சென்று சேர்கின்றன என்றும் அரசியல் கட்சிகளும், அரசாங்கமும் மக்களுக்கு பொறுப்புள்ளவையாக இருக்கின்றன என்றும் பிரதமர் தெரிவித்தார். அவர்களின் நடவடிக்கை மக்களுக்கு தெரிந்திருக்க வேண்டி இருக்கிறது என்றும் பிரதமர் கூறினார். அடல் பிஹாரி வாஜ்பாய் தலைமையில் கூட்டணி அரசு அமைந்ததாகவும், அனைத்து கூட்டணிக் கட்சித் தலைவர்களும் பொறுப்புடன் செயல்பட்டதாகவும் பிரதமர் தெரிவித்தார். அதே நேரத்தில் திரு. மன்மோகன் சிங் தலைமையிலான கூட்டணி அரசில் அதிகாரம் படைத்த தலைவராக அவர் செயல்பட்டதாக பிரதமர் கூறினார். இண்டி கூட்டணி ஆட்சிக்கு வந்தால் ஆண்டிற்கு ஒரு பிரதமர் வீதம், 5 பிரதமர்கள் நாட்டை வழிநடத்துவார்கள் என்றும் பிரதமர் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

நாட்டின் நல்லெண்ணம் மற்றும் கொள்கைகளால் பாரதிய ஜனதா கட்சி 3ஆவது முறையாக ஆட்சி அமைக்க முடிவு செய்துள்ளதாக பாஜக மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். உத்தரப்பிரதேச மாநிலம் மிர்சாபூரில் இன்று நடைபெற்ற தேர்தல் பொதுக்கூட்டத்தில் பங்கேற்றுப் பேசிய அவர், சமாஜ்வாதி கட்சி மற்றும் காங்கிரஸ் கட்சியினர் வாக்கு வங்கிக்காக அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும், அதே சமயம் நாட்டின் ஏழைகள், தலித்துகள் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் அவர்

தெரிவித்துள்ளார். இதேபோல் சமாஜ்வாதி கட்சியின் தலைவர் திரு. அகிலேஷ் யாதவ் இன்று சேலம்பூர் மற்றும் பல்லியாவில் நடைபெற்ற பல்வேறு தேர்தல் பிரச்சார கூட்டங்களிலும் உரையாற்றினார்.

இமாச்சலப் பிரதேசத்தின் சிம்லா நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட சிர்மவுர் மாவட்டத்தில் உள்ள நஹானில் இன்று நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில், காங்கிரஸ் தலைவர் திரு. ராகுல் காந்தி பங்கேற்றுப் பேசினார். அரசியல் சாசனத்தை பாதுகாக்க காங்கிரஸ் போராடும் முதல் தேர்தல் இதுவாகும் என்றும் அவர் தெரிவித்தார். கடந்த 10 ஆண்டுகளில், 22 பேரின் 16 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான கடனை பிரதமர் திரு. நரேந்திர மோடி தள்ளுபடி செய்ததாக அவர் தெரிவித்தார். ஆனால், கடந்த ஆண்டு, இமாச்சலப்பிரதேசத்தில் பருவமழையால் ஏற்பட்ட பேரழிவை சமாளிக்க 9 ஆயிரம் கோடி ரூபாய் வழங்க அவரால் முடியவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மத்திய உள்துறை அமைச்சரும், பாஜக மூத்த தலைவர்களில் ஒருவருமான திரு. அமித் ஷா இன்று பீகார் மற்றும் பஞ்சாப் மாநிலங்களில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டுள்ளார். பீகாரில் உள்ள ஆரா மற்றும் கைமூரில் நடைபெற்ற பொதுக்கூட்டங்களிலும் அவர் உரையாற்றினார். தொடர்ந்து இன்று மாலை லுதியானாவில் நடைபெறும் பொதுக்கூட்டத்திலும் அவர் பங்கேற்று உரையாற்ற உள்ளார்.

***7ஆம் கட்டத் தேர்தல் -4 (9)***

இதே போல் காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கேவும் இன்று பீகாரில் பிரச்சாரம் மேற்கொண்டுள்ளார். பின்னர் பாட்னாவில் நடைபெறும் மற்றொரு பொதுக்கூட்டத்திலும் அவர் உரையாற்ற உள்ளார்.

காங்கிரஸ் பொதுச் செயலாளர் திருமதி. ப்ரியங்கா காந்தி இன்று பஞ்சாப் மாநிலத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசினார். விவசாயிகளின் நலனை பாதுகாக்க பிஜேபி தலைமையிலான அரசு தவறிவிட்டதாக அவர் குற்றம் சாட்டினார். மத்தியில் காங்கிரஸ் கட்சி பொறுப்பேற்றால், பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு 30 நாட்களுக்குள் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

***வரவேற்பு (14)***

மக்களவைத் தேர்தல் முடிவடைந்து முடிவுகள் அறிவிக்க இன்னும் சில நாட்களே உள்ள நிலையில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை நாடாளுமன்றத்தில் வரவேற்கும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. இதற்கான ஏற்பாடுகளை மக்களவைச் செயலகம் செய்து வருகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்கள் குறித்த அறிவிப்பை தேர்தல் ஆணையம் வெளியிட்ட உடன், புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்கு வரத்

தொடங்குவார்கள் என்றும், அவர்களை வரவேற்க விமான நிலையங்கள் மற்றும் ரயில் நிலையங்களில் சிறப்பு வரவேற்பு மையங்கள் அமைக்கப் பட்டுள்ளதாகவும், மக்களவைச் செயலகம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற கட்டிடத்திற்கு அவர்கள் வந்தபிறகு அவர்களுக்குத் தேவையான ஸ்மார்ட் அணுகல் அட்டைகள், அவர்களின் வாகனங்களுக்கு fastag sticker-கள் உட்பட பல ஆவணங்கள் வழங்கப்படும் என்று மக்களவைச் செயலகம் தெரிவித்துள்ளது.

***ரீமல் புயல் (15)***

மத்திய வங்கக் கடலில் நேற்றிரவு உருவான ரீமல் புயல், இன்று நள்ளிரவு வங்கதேசத்தின் கேபுபாரா, மேற்குவங்க மாநிலம் சாகர் தீவு இடையே கரையைக் கடக்கும் என்றும், அப்பொழுது மணிக்கு 135 கிலோமீட்டர் வேகத்தில் காற்று வீசும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக மேற்கு வங்கத்தின் கடலோர மாவட்டங்களில், மிக கனமழை பெய்யும் என்றும், வடக்கு ஒடிசாவில் இன்றும் – நாளையும் கனமழை பெய்யும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து ரீமல் புயலை எதிர்கொள்ள இந்திய கடற்படை தயார் நிலையில் உள்ளது. மக்களின் பாதுகாப்பு மற்றும் நலனை கருத்தில் கொண்டு நிவாரணம் மற்றும் மருத்துவப் பொருட்கள் அடங்கிய 2 கப்பல்களை இந்திய கடற்படை தயார் செய்துள்ளது. கூடுதலாக சீ-கிங்

மற்றும் சேட்டக் ஹெலிகாப்டர்கள் மற்றும் டோர்னியர் விமானங்கள் உள்ளிட்ட இந்திய கடற்படை விமானங்களும் தயார் நிலையில் உள்ளன. உடனடி உதவிகளை வழங்க சிறப்பு டைவிங் குழுக்களும் கொல்கத்தாவில் தயார் நிலையில் உள்ளதாக இந்திய கடற்படை தெரிவித்துள்ளது.

***விபத்து -1 (19)***

குஜராத் மாநிலத்தில் ராஜ்கோட் நகரில் அமைந்துள்ள T.R.B. விளையாட்டு மைதானத்தில் நேற்று மாலை ஏற்பட்ட தீ விபத்தில் இதுவரை 27 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் 9 பேர் குழந்தைகள் ஆவர். பள்ளி விடுமுறை முடிந்துவிட்டதால், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுடன் விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது தீ விபத்து ஏற்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த சம்பவம் குறித்து விசாரிக்க சிறப்பு புலனாய்வுக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த தீ விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி, காங்கிரஸ் தலைவர் திரு. ராகுல் காந்தி உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு விடுத்துள்ள இரங்கல் செய்தியில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவிப்பதாகவும், தீ விபத்தில் காயமடைந்தோர் விரைவில் குணமடைய தாம் பிரார்த்தனை செய்வதாக குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே, தீ விபத்து நிகழ்ந்த விளையாட்டு வளாகத்திற்கு குஜராத் மாநில முதலமைச்சர் திரு. பூபேந்திர படேல் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு 4 லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் மாநில அரசு வழங்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

***விபத்து -2 (15)***

குஜராத் மற்றும் டெல்லியில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார். மேலும் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு நிதியுதவியும் அவர் அறிவித்துள்ளார். உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து 2 லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்த தீ விபத்து குறித்து, காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி விடுத்துள்ள இரங்கல் செய்தியில், இந்த தீ விபத்தில் சிறார்கள் உட்பட 27 பேர் உயிரிழந்தது மிகவும் வேதனை அளிப்பதாகவும், உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தாம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

குஜராத் ராஜ்கோட் விளையாட்டுத் திடலில் நேற்று ஏற்பட்ட பெரும் தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு புதுச்சேரி மக்கள் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்வதாக

புதுச்சேரி மாநில துணைநிலை ஆளுநர் திரு. சி.பி. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

***ஜக்தீப் தன்கர் (11)***

குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் நாளை கர்நாடக மாநிலம் பெலகாவி மற்றும் பெங்களூர் செல்ல உள்ளார். அவர் இந்த பயணத்தின்போது பெலகாவியில் உள்ள இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் தேசிய பாரம்பரிய மருத்துவ நிறுவன தினம் மற்றும் கேஎல்இ பல்கலைக் கழகத்தின் 14ஆவது பட்டமளிப்பு விழாவில் தலைமை விருந்தினராக பங்கேற்று உரையாற்ற உள்ளார். பின்னர், இந்திய தொழிலக ஆராய்ச்சி கவுன்சிலின் தேசிய விமான ஆய்வகத்தின் வளாகத்திற்குச் சென்று இலகுரக போர் விமானத்தின் அம்சங்கள் மற்றும் கண்காட்சியை பார்வையிட உள்ளார். தொடந்து, சில திட்டங்களுக்கும் அவர் அடிக்கல் நாட்ட உள்ளார். தமது பயணத்தின்போது அவர் பெங்களூருவில் உள்ள ஆளுநர் மாளிகைக்கும் செல்ல உள்ளார்.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

மக்களவைக்கு நேற்று நடைபெற்ற ஆறாம் கட்ட தேர்தலில் 61.76 சதவிகித வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

7ஆம் கட்டத் தேர்தல் அடுத்த மாதம் 1ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில், முக்கிய அரசியல் கட்சித் தலைவர்களின் தேர்தல் பிரச்சாரம் சூடுபிடித்துள்ளது.

மக்களவைத் தேர்தல் முடிவடைந்து முடிவுகள் அறிவிக்க இன்னும் சில நாட்களே உள்ள நிலையில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை நாடாளுமன்றத்தில் வரவேற்கும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

மத்திய வங்கக் கடலில் நேற்றிரவு உருவான ரீமல் புயல், இன்று நள்ளிரவு வங்கதேசத்தின் கேபுபாரா, மேற்குவங்க மாநிலம் சாகர் தீவு இடையே கரையைக் கடக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது